அ.வ.எண்.**201/2023** பி.வா.சா.**1 –** மாரியம்மாள் **05.12.2024**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

என் உடன் பிறந்தவர்கள் காளியம்மாள், செண்பகவள்ளி, முருகன், கருப்பசாமி ஆகியோர் ஆவார். என் அம்மா பெயர் பொம்மாயி. அப்பா பெயர் அய்யனாகவுண்டர். என் அப்பாவிற்கு எர்ரம்மா என்ற மற்றொரு மனைவியும் உண்டு. என் அப்பாவிற்கு எர்ரம்மா மூலம் முத்தம்மாள் மற்றும் தங்கம்மாள் ஆகிய இரண்டு மகள்களும், பழனிச்சாமி, ஆண்டியப்பன், காசு (எ) கிருஷ்ணன் ஆகிய மூன்று மகன்களும் உண்டு. வா.சா.3 ஆசைத்தம்பி அப்பா பெயர் முத்துசாமி. முத்துசாமியின் உடன் பிறந்தவர்கள் வெங்கடாசலம், ரெங்கசாமி, கிருஷ்ணன், சீரங்கன், நாகம்மாள், பார்வதி ஆகியோர் ஆவார். மேற்சொன்ன நபர்களில் வெங்கடாசலம் என்பவரின் மனைவி செண்பகவள்ளி. வெங்கடாசலம், செண்பகவள்ளி ஆகியோர்களுக்கு பிறந்தவர் ராமமூர்த்தி. ரெங்கசாமி என்பவரின் மகள் அன்புசெல்வி. சீரங்கன் என்பவரின் ஒரு மகன் பெயர் சசிக்குமார். சசிக்குமார் திருப்பூரில் வசித்து வருகிறார். நான் ஊராளிக்கவுண்டர் ஜாதியை சார்ந்தவர். 1ம் வாதி முதலியார் ஜாதியை சார்ந்தவர். 1ம் வாதியும், ராமமூர்த்தி என்பவரும் படிக்கும்பொழுது ஒருவரை ஒருவர் விரும்பி திருமணம் செய்து கொண்டனர். வெங்கடாசலம், செண்பகவள்ளி ஆகியோருக்கு ஒரே மகன் ராமமூர்த்தி. வெங்கடாசலம் தமிழ்நாடு அரசாங்கத்தில் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தார். ராமமூர்த்தியின் திருமணத்தை வெங்கடாசலம், செண்பகவள்ளி ஏற்றுக்கொண்டனர் என்றால் சரியல்ல. 1ம் வாதி ராமமூர்த்தி ஆகியோரது திருமணத்தை ராமமூர்த்தியின் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டனர் என்று சொன்னால் சரியல்ல. 1ம் வாதியும், ராமமூர்த்தியும் திருமணம்

செய்தபோது வெங்கடாசலம், வெண்பகவள்ளி ஆகியோர் சேலத்தில் குடியிருந்து வந்தனர். வெங்கடாசலத்தின் சொந்த ஊர் பாளையத்திற்கு அருகில் உள்ள சீத்தப்பட்டி. சங்கீதா, ராமமூர்த்தி திருமணத்தின்போது ஆரம்ப காலத்தில் சங்கீதாவின் பெற்றோர்கள்தான் விருப்பமில்லாமல் இருந்தார்கள் என்றால் சரியல்ல. சங்கீதா, ராமமூர்த்தி திருமண உறவில் சங்கீதா கருவுற்ற பின்னர் சங்கீதாவின் பெற்றோர்கள் அவர்கள் திருமணத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது, ராமமூர்த்தியின் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வாதி தரப்பில் யார் யார் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றும், என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிந்து கொண்டேன். 2ம் வாதி பிறந்த பின்னர் அவரது தகப்பனார் படுகொலை செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. ராமமூர்த்தி இறந்த பிறகு சேலத்தில் இருந்து வெங்கடாசலமும், செண்பகவள்ளியும் கரூருக்கு வந்துவிட்டனர். ஆரம்பத்தில் இருவரும் காந்திகிராமத்தில் வாடகைக்கு குடியிருந்து வந்தனர். அப்போது வாதிகளும், 1ம் வாதியின் பெற்றோர்களும் கரூருக்கு அடிக்கடி வந்து வெங்கடாசலத்தையும், செண்பகவள்ளியையும் பார்த்துக் கொண்டனர் என்றால் சரியல்ல. வெங்கடாசலமும், செண்பகவள்ளியும் வாதிகளை சேலத்திற்கு சென்று அடிக்கடி பார்த்து வந்தனர் என்று சொன்னால் சரியல்ல. சேலத்தில் வெங்கடாசலம், செண்பகவள்ளிக்கு இருவருக்கும் சொந்தமான வீடு இருந்தது. அந்த வீட்டை விற்றுதான் கரூரில் வழக்குச்சொத்தை கிரையம் வாங்கினர் என்றால் சேலத்தில் உள்ள வீடு என் அக்காவிற்கு என் அப்பா கொடுத்த வீடாகும். வழக்குச்சொத்தை கட்டுமானம் கட்டும்போது 1ம் வாதியின் தகப்பனார் உடனிருந்து உதவி செய்தார் என்று சொன்னால் சரியல்ல. நானும், என் உறவினர்களும் செண்பகவள்ளியை பார்த்துக் கொண்டது கிடையாது என்றும், அவருக்கு ஒத்தாசை செய்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. ராமமூர்த்தியின் பெற்றோர்கள்

கேட்டுக்கொண்டதற்கு இணங்க சங்கீதா மறுமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-3 உயிலில் உள்ள 2 வது சாட்சி மாரிமுத்து கொத்தனார் வேலை பார்த்தார் என்றால் சரியல்ல, விவசாயம் செய்கிறார். மேற்சொன்ன மாரிமுத்து எர்ரம்மாவின் மகள் தங்கம்மாளின் கணவர். என் மகன் பெயர் பிரகாஷ். அவர் Electronic Engineering இரண்டு பட்டம் பெற்றுள்ளார். பிரகாஷ் படிப்பதற்கு வெங்கடாசலம் ரூ.1,00,000/- கொடுத்தார் என்றால் ரூ.40,000/- கொடுத்தார், அதை நான் திருப்பி கொடுத்துவிட்டேன். வெங்கடாசலத்திற்கு ரத்தக்கொதிப்பு நோய் இருந்தது. என் மகன் படிப்பிற்கு வெங்கடாசலம் கொடுதத ரூ.1,00,000/- ததை திருப்பி கேட்டு அதை கொடுக்காமல் மாரிமுத்து என்பவர் வெங்கடாசலத்தை அடித்ததின் காரணமாக அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வெங்கடாசலம் இறப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு கோயமுத்தூரில் உள்ள கே.எம்.சி.எச். மருத்துவமனையில் சிகிச்சை எடுததார். அப்போது திருப்பூரில் இருந்து சசிக்குமார் சென்று அவரை பார்த்துக் கொண்டார் என்றால் சரியல்ல. வெங்கடாசலத்தை தாக்கியதால் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது என்றும், அதனால் என் குடும்பத்தின்மீது செண்பகவள்ளிக்கு மனவருத்தம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வெங்கடாசலம் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்ட மறுநாள் கரூருக்கு வந்த பின்னர் இறந்துவிட்டார். வாதிகள் அப்போது மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் இருந்து வந்ததால் வரமுடியவில்லை என்றும், அதனால் 1 ம் வாதியின் அப்பா அந்த இறப்பில் கலந்து கொண்டார் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/- ஆர்.சண்முகசுந்தரம்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்